[2020 மார்ச் 12

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். சின்னதம்பி அவர்கள்.

திரு. ஆர்.எம். சின்னதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், கிழக்குப் பகுதியில் சுமார் 50 மேல்நிலைப் பள்ளிகளும், 50–க்கும் மேற்பட்ட உயர்நிலைப் பள்ளிகளும் உள்ளன. ஒரு வருடத்திற்கு 10,000 மாணவ, மாணவிகள் படிக்கிறார்கள். இவர்களுடைய நலன்கருதி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று, நிறைவேற்றித் தருவேன் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியதற்கு நன்றி தெரிவித்து, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 85, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

85—

பேருந்து வசதி

***38088—திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேலூர் தொகுதி, கொட்டாம்பட்டியிலிருந்து ஒட்டக்கோவில்பட்டி, அலங்கம்பட்டி, கம்பூர், கேசம்பட்டி, வெள்ளிமலைப்பட்டி மற்றும் புலிப்பட்டி வழியாக அழகர்கோவிலுக்கு பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் மூலமாக அழகர்கோவிலிலிருந்து வள்ளாலப்பட்டி வழியாக மேலூருக்கு 26 தனி நடைகளும், மேலூரிலிருந்து வள்ளாலப்பட்டி வழியாக புலிக்குடிக்கு 16 தனி நடைகளும், மேலூரிலிருந்து வள்ளாலப்பட்டி, புலிக்குடி வழியாக வெள்ளிமலைப்பட்டிக்கு 6 தனி நடைகளும், மேலும்

2020 மார்ச் 12]

மேலூரிலிருந்து கேசம்பட்டி, சானிப்பட்டி வழியாக சேக்கிப்பட்டிக்கு 28 தனி நடைகளும், மேலூரிலிருந்து நத்தத்திற்கு கேசம்பட்டி, சானிப்பட்டி, சேக்கிப்பட்டி வழியாக 14 நடைகளும், மேலூரிலிருந்து அலங்கம்பட்டி, கம்பூர் வழியாக சேக்கிப்பட்டிக்கு 4 நடைகளும் என பகுதி பகுதியாக அனைத்து கிராமங்களுக்கும் தினசரி பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், கொட்டாம்பட்டி மற்றும் புலிப்பட்டி வழியாக அழகர்கோவில் செல்வதற்கான வழித்தடம் 41.3 கி.மீ. ஆகும். தற்போதுள்ள விதிகளின்படி, இவ்வழித்தடம் 35 கி.மீ.–க்கு மேல் உள்ளதாலும், வெள்ளிமலைப்பட்டிக்கும் கேசம்பட்டிக்கும் இடைப்பட்ட 6 கி.மீ. தூரம் செம்மண் சாலையாகவும், கனரக வாகனங்கள் இயக்க இயலாத சூழ்நிலையில் உள்ளதாலும் நகரப் பேருந்து இயக்க வழிவகையில்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம் அவர்கள்.*

திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நல்லாசியோடும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியோடும் நல்லாட்சி நடத்திவரும் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது மேலூர் தொகுதி, அதிக கிராமங்களைக் கொண்ட தொகுதியாகும். மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அண்ணன் அவர்களும், அனைத்துக் கிராமங்களுக்கும் தார்ச்சாலை வசதி செய்து கொடுத்துள்ளார்கள். எனது மேலூர் தொகுதியிலுள்ள அழகர்கோவிலில் தென்திருப்பதி எனப் போற்றப்படும் பிரசித்தி பெற்ற பெருமாள் கோயிலும், பதினெட்டாம்படி கருப்பண்ணசாமி கோயிலும், ஆறாவது படைவீடான பழமுதிர்சோலை முருகன் கோயிலும், ராக்காயி அம்மன் கோயிலும், நூபுரகங்கை தீர்த்தமும் அமைந்துள்ளன. தற்போது அழகர்கோவிலுக்கு மேலூரிலிருந்தும், மதுரையிலிருந்தும், நத்தத்திலிருந்தும், வாடிப்பட்டியிலிருந்தும் பேருந்து வசதிகள் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. எனது மேலூர் தொகுதி அதிகமான கிராமங்களைக் கொண்ட பகுதியாக இருப்பதால், கிராமங்களிலிருந்து அதிகமான பக்தர்கள் சாமி

தரிசனம் செய்வதற்கு அழகர்கோவிலுக்கு வருகை தருகிறார்கள். மேலும்,கேசம்பட்டியிலிருந்துவெள்ளிமலைப்பட்டிக்குஇப்பொழுது தார்ச்சாலை போடப்பட்டுள்ளதால், கொட்டாம்பட்டியிலிருந்து ஒட்டக்கோவில்பட்டி, அலங்கம்பட்டி, கம்பூர், கேசம்பட்டி, வெள்ளிமலைப்பட்டி, புலிப்பட்டி வழியாக அழகர்கோவிலுக்கு பேருந்து வசதி செய்து கொடுக்குமாறு மாண்புமிகு அமைச்சர் அண்ணன் அவர்களை தங்கள் வாயிலாக மீண்டும் வலியுறுத்திக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியிருக்கக்கூடிய வழித்தடத்தில் தார்ச்சாலை அமைக்கப்பட்டிருந்தால், அதிகாரிகளை அனுப்பி ஆய்வு செய்து, அந்த வழித்தடத்தில் பேருந்துகள் இயக்குவது குறித்து அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம் அவர்கள்.

முற்பகல் 11–50

திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் கனவை நிறைவேற்றும் வகையில் கிராமங்களிலிருந்து அதிகமான மாணவிகள் மேல்நிலைப் பள்ளிக்கும், கல்லூரிக்கும் செல்கின்றனர். மேலூரிலிருந்து, மேலவளவு அரசு மேல்நிலைப் பள்ளி, முத்துக்கருப்பன்பட்டி, கம்பூர் வழியாக கருங்காலக்குடிக்கும், தும்பைபட்டி அரசு மேல்நிலைப் பள்ளி, பூதமங்கலம், நல்லசுக்காம்பட்டி, மூவன்சீவல்பட்டி வழியாக சிங்கம்புணரிக்கும், அய்யாபட்டி ஊராட்சி, மலம்பட்டி, சொக்கலிங்கபுரம் வழியாக சிங்கம்புணரிக்கும், அழகர்கோவிலிலிருந்து புழுதிபட்டி வழியாக பொன்னமராவதிக்கும் காலையிலும், மாலையிலும், பள்ளி மற்றும் கல்லூரி நேரங்களில் பேருந்து வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அண்ணன் அவர்களையும், மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் கேட்டு அமர்கிறேன்.

2020 மார்ச் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சில வழித்தடங்களைக் குறிப்பிட்டு, பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகளின் வசதிக்காக பேருந்து வசதிகளைச் செய்து கொடுக்கும்படி கேட்டுக் கொண்டுள்ளார். பள்ளி மற்றும் கல்லூரி நேரங்களில் தமிழகம் முழுவதும் உள்ள அனைத்துப் பகுதிகளிலும் பேருந்துகளை இயக்கிக் கொண்டிருக்கிறோம். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற வழித்தடங்களை எழுத்துபூர்வமாகக் கொடுத்தால், அதை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் வழங்கி, ஆய்வு செய்து, பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகளின் வசதிக்கேற்ப, அந்த வழித்தடங்களில் பேருந்து வசதிகள் இல்லையென்று சொன்னால், அந்த வழித்தடங்களில் பேருந்துகளை இயக்குவதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

கன்னியாகுமரி மாவட்டம், இரப்பர் தோட்டக் கழகத் தொழிலாளர்களின் தொடர் வேலைநிறுத்தப் போராட்டம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என். சுரேஷ் ராஜன் அவர்கள்.*

திரு. என். சுரேஷ் ராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கக்கூடிய இரப்பர் தோட்டக் கழகத்தின்கீழ் பணியாற்றக்கூடிய சுமார் 2,000–க்கும் மேற்பட்ட இரப்பர் தோட்டக்*